1974 மார்ச் 6]

டாக்டர் கருணுநிதி நகர், அறிவுக்கு அறிவாலயம் அறிஞர் அண்ணு அவர்களுடைய நகர் ஆகியவை எல்லாம் சேர்க்கப் பட்டிருக்கிறதா? இல்லாவிட்டால் சேர்க்கப்படும் என்பதற்கான உத்தரவாவது பிறப்பிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இதுபற்றி பரிசீலிக்கப் படும்.

அரிசனக் குடியிருப்புக்களுக்குக் குடிநீர் வழங்கல்

*298 வினு—திரு. த. சோனையா: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப் பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றி யத்தைச் சார்ந்த செம்பட்டிமடை அரிசன குடியிருப்புக்குப் பாது காக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த செம்பட்டிமடை அரிசன குடியிருப்புக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்காக செயற்குறிப்பு மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. த. சோனையா: இந்த செம்பட்டிமடை திருப்புவனம் ஒன்றியத்தில் இருந்தாலும், அது அருப்புக்கோட்டை தாலுக்கா வின் அருகில் அமைந்திருக்கிறது. அந்த ஊர் அரிசனக் குடியிருப் பில் உள்ள அரிசன மக்கள் குடிக்கக் கூடத் தண்ணீர் இன்றிக் கஷ்டப்படுகிறார்கள். செம்பட்டிமடை அரிசனக் குடியிருப்பில் உள்ள அரிசன மக்களுக்கு தண்ணீர் கொண்டுவந்து கொடுக்கிற திட்டத்தை தீவிரப்படுத்தி, இதை ஒரு முனைப்புத் திட்டமாக செயல்படுத்த, முன்னுரிமை வழங்கப்படுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: இதற்கு நிதி இருபத்தைந்தாயிரம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிசீலனை முடிந்த பிறகு இது விரைவுபடுத்தப்படும்.

LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

திருமதி த. ந. அனந்தநாயகி : அரிசன குடியிருப்புகளுக்கான குடிநீர்த் திட்டத்தை பஞ்சாயத்துகளும், பஞ்சாயத்து ஒன்றியங்களும் நிறைவேற்றுகின்றனவா ? அல்லது அந்தத் திட்டங்களை அரிசன வெல்ஃபேர் டிபார்ட்மெண்டே நேரிடையாக எடுத்து நடத்துகின்றதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அரிசன நலத்துறை அந்தத் திட்டங்களுக்கான நிதியை ஒதுக்கித் தருகிறது. பஞ்சாயத்துகளும், பஞ்சாயத்து ஒன்றியங்களும் அவற்றை நிறைவேற்றுகின்றன.

திரு. எஸ். வடிவேல் : அரிசனங்களுக்கு குடிநீர் வழங்குவதற்காக ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு தொகை ஒதுக்கப்படுகிறது ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : கடந்த ஆண்டு 17 லட்சம் ஒதுக்கப்பட்டது.

திரு. தொ. ப. சீனிவாசன் : அரிசனக் குடியிருப்புகளுக்கு நீர்வழங்கும் திட்டத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் செயல்படுத்துவதாக அறிகிறோம். ஊராட்சி ஒன்றியங்கள் சிலயிடங்களில் செய்து வருகிறது. மாவட்ட நல அதிகாரிகள் இந்தத் திட்டத்தை பரவலாக, எங்கெங்கு குடிதண்ணீர் இன்றி கஷ்டப்படுகிறார்களோ அங்கெல்லாம் செய்யாது, ஒருசில இடங்களிலேயே செய்கின்ற நிலைமை இருக்கிறது. ஆகவே இந்தத் திட்டத்தைப் பரவலாக ஆங்காங்கே நிறைவேற்ற வேண்டுமென்று அரிசன நல இலாக்கா ஆணை பிறப்பிக்குமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : மாவட்ட நல அதிகாரிகள் செய்கின்ற பணிக்கு சட்டமன்ற அங்கத்தினர்களும் துணையாக இருக்கிறார்கள். இவர்களும் ஆங்காங்கே செய்ய வேண்டுமென்று கேட்கிறார்கள். பொதுமக்களின் கோரிக்கைகளையும் அனுசரித்து, அந்தத் திட்டங்களை எங்கெங்கே நிறைவேற்றுவது என்பதை அவர்கள் தேர்ந்தெடுக்கிறார்கள்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : ஆறுகளோ, குளங்களோ இல்லாத பகுதிகளில், அரிசன மக்கள் குடியிருக்கிற பகுதிகளில் குடிநீருக்காக எடுக்கப்படுகின்ற கிணறு சிலநேரம் உப்புத் தண்ணீராக மாறிவிடுகின்றது. சில இடங்களில் தண்ணீர் இன்றி

1974 மார்ச் 6]

வற்றிப்போய்விடுகிறது. அதன்காரணமாக அங்குள்ளவர்கள் இரண்டு மூன்று மைல்கள் தண்ணீருக்காகப் போக வேண்டியதாக இருக்கிறது. ஆகவே, இதுபோன்ற அரிசன காலனிகளில் வசிக்கும் மக்களுக்காகவாவது விசேஷ திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தண்ணீர் வசதி இல்லாத அரிசன குடியிருப்புகளில் கிணறுவெட்டுகிறபோது, வெட்டப்பட்ட கிணறு உப்புத் தண்ணீராக ஆகிவிட்டாலோ, கிணற்றில் தண்ணீர் வற்றிப்போய்விட்டாலோ தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் தொகுதியில் குறையிருந்து தெரிவித்தால் நடவடிக்கை எடுக்கிறேன்.

திரு. ஆ. கு. சுப்பையா : சென்ற ஆண்டு 17 லட்சம் குடி-தண்ணீர் திட்டத்திற்காக ஒதுக்கியதாகச் சொன்னார்கள். பஞ்சாயத்து யூனியன்கள் துரிதமாக இந்தத் திட்டங்களை நிறைவேற்றுவது இல்லை என்ற புகார் வருகிறது. ஒதுக்கப்பட்ட 17 லட்சத்தில் எவ்வளவு செலவழிக்கப்பட்டிருக்கிறது என்கிற விவரத்தைத் தருவார்களா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : கேள்வி செம்பட்டிமடை அரிசன குடியிருப்புக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவது பற்றியது. அதற்கான விவரங்களைச் சொன்னேன். இதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

*299 Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state the steps taken by the Government to supply drinking water for Harijans in Muthugoundenvalasu, Pungampadi Paravalasu, Myladi and Goundenpalayam in Chennimali Firka of Erode taluk?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : ஈரோடு வட்டம் சென்னிமலை பிர்காவிலுள்ள முத்துகவுண்டன்வலசு, புங்கம்பாடி-பரவலசு, மைலாடி, கவுண்டன்பாளையம் ஆகிய கிராமங்களிலுள்ள அரிசன மக்களுக்கு குடிநீர் வசதி அளிக்க அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கை விபரங்களைக் காட்டும் விவர அறிக்கை@ ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

@ 359-361-ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.